# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1823 - 2013 අගෝස්තු මස 08 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.08.08

*1823 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1074 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2013, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஓகத்து மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## சுதேச மருத்துவத்துறை அமைச்சு

### இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரத்தைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

ஆயுர்வேத திணைக்களத்தின் மருத்துவ உத்தியோகத்தர் வகுதியில் வெற்றிடமாகவுள்ள ஆரம்ப தரத்தைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இந்த அறிவித்தலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தகைமைகளை 2013.01.01 ஆந் திகதியன்று பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்புத் திட்டம்**.- 2013.01.01 ஆந் திகதியன்று ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளவர்களும், இறுதிப் பட்டப்படிப்பு (ஆயுர்வேத/ சித்த/ யுனானி) பரீட்சையில் சித்தியடைந்தவர்களும், இற்றைவரை அரசாங்க சேவையில் நியமனங்களைப் பெறாதவர்களும், ஆரம்பக் குழுவில் பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்களில் சகலரும் இறுதிப் பட்டப்படிப்புப் பரீட்சையில் ஒவ்வொருவரும் பெற்றுள்ள புள்ளிகளின் அடிப்படையில் திறமை ஒழுங்குமுறையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் அடுத்துவரும் ஆண்டுகளில் ஏனைய குழுக்களில் ஆயுர்வேத/ சித்த/ யுனானி பட்டதாரி மருத்துவர்கள், அவர்கள் பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டின் ஒழுங்குமுறையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள திறமை அடிப்படையின் மீது, விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகளை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் தெரிவுசெய்யப்படுவர்.

2. **தேவையான தகைமைகள்**.- (i) *கல்வி/ தொழில்சார் தகைமைகள்*.- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆயுர்வேத/ சித்த/யுனானி மருத்துவம் தொடர்பாக ஐந்து (05) வருட பாடநெறியை கற்று, ஒரு (01) வருட கால பயிற்சி நிலைக்கால பயிற்சியைப் பூர்த்திசெய்து பெற்றுள்ள பட்டப்படிப்பின் பின்னர் ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள மருத்துவர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ii) *உடல் ரீதியான தகைமைகள்*.- எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எப்பாகத்திலும் கடமை புரிவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள ரீதியான தகுதியையும், நன்கு கண் பார்வைகளைக் கொண்டுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(iii) *வேறு தகைமைகள் :*

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கத்தைக் கொண்டவர் களாக இருத்தல் வேண்டும் ;
* 2013.01.01 ஆந் திகதியாகும்போது பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எல்லா விதத்திலுமான தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்** :

(i) இந்தப் பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியத்தைக் கொண்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்கள்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்த நியமனமானது மூன்று (03) வருடகால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். ஆரம்ப தரத்தைச் சேர்ந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் பதவியுயர்வுகள் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் காட்டப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் ஏற்புடையதாக மேற்கொள்ளப்படும்.

(iii) 07/ 2007 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு அமைவாக பதவியில் இணைந்து ஐந்து வருடகாலப் பகுதிக்குள் சேவையில் இணைந்துகொண்ட மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகள் தொடர்பில் உரிய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) இந்த நியமனமானது, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாகும்.

4. **வயதெல்லை**.- 2013.01.01 ஆந் திகதியன்று வயது 40 வருடங்களுக்குக் கூடுதலாக இருத்தலாகாது.

5. **சம்பள அளவுத் திட்டம்**.- இந்தப் பதவி ரூபா 25,515-4X645-8X650-16X1,050-ரூபா 50,095 ஐக் கொண்ட மாதாந்த சம்பள அளவுத் திட்டத்திற்கு உரித்ததாகும். 6/ 2006 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் எஸ்எல் 2 - 2006 சம்பளத் தொகுதி (ஆரம்ப சம்பளப் படிநிலை 26,160 ரூபாவாகும்.)

6. **விண்ணப்பதாரர்களின் அடையாளம்**.- எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்ப தாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளையும் முறையானவாறு உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ நேர்முகப் பரீட்சை சபையால் கோருகின்றவிடத்து விண்ணப்பதாரிகள் அவற்றைச் சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) பட்டப்படிப்புச் சான்றிதழ் ;
(iii) ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவுச்சான்றிதழ் ;
(iv) பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ;
(v) தேசிய ஆளடையாள அட்டை.

7. (அ) விண்ணப்பங்கள் 2013.09.07 ஆந் திகதியன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் பின்வரும் விலாசத்திற்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :-

ஆயுர்வேத ஆணையாளர்,
ஆயுர்வேத திணைக்களம்,
பழைய கொட்டாவ வீதி,
நாவின்ன, மகரகம.

(ஆ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப் படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பங்களை ஏ4 அளவிலான தாளில் தயாரித்து முதலாம் பக்கம் இலக்கம் 1 தொடக்கம் 9 வரையிலும் 2 ஆம் பக்கம் இலக்கம் 10 தொடக்கம் 11 வரையிலும் என்ற வகையில் ஒழுங்குசெய்து தமது கையெழுத்தினால் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரத்தைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் ஒப்பத்தை அரசாங்க பாடசாலையின் அதிபரினால்/ சமாதான நீதவானினால்/ சத்தியப்பிரமாண ஆணையாளரினால்/சட்டத்தரணியினால்/பிரசித்த நொத்தாரிசினால்/முப்படையின் தத்துவம்பெற்ற உத்தியோகத்தரினால் அல்லது 22,935 ரூபாவை மாதாந்த திரட்டிய சம்பளமாகப் பெறுகின்ற அரசாங்கத்தின் நிரந்தரப் பதவியை வகிக்கின்ற உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(உ) ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தாம் கடமை புரிகின்ற திணைக்களத்தின் திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் பற்றிய எந்தவொரு முறைப்பாடும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

8. **போலியான தகவல்களை வழங்குதல்.**- தங்களினால் அனுப்பப் படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் போலியானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்புக்கு முன்னர் தெரியவருமிடத்து தங்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அவ்வாறு போலியான அல்லது தவறான தகவல்கள் என ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து இதற்குரித்தான நடவடிக்கைகளுக்கு உட்பட்டு, பணிநீக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

9. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாமல் விடுதல் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரித்தான உரிமையாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம்,

லலித் கன்னங்கர,
செயலாளர்,
சுதேச மருத்துவத்துறை அமைச்சு.

என். எம். பெரேரா மாவத்தை,
கொழும்பு 08,
2013.07.15.

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆயுர்வேத திணைக்களத்தின் மருத்துவ உத்தியோகத்தர் வகுதியின் ஆரம்ப தரத்தைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தர் பதவி**

1. (i) (அ) முதலெழுத்துக்களுடனான பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   (ஆ) முதலெழுத்துக்களுடனான பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

   (ii) (அ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   (ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. (i) நிரந்தர விலாசம் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (கடிதங்கள் இந்த விலாசத்திற்கே அனுப்பப்படும்) :----.

   (ii) தொலைபேசி இலக்கம் :----.

3. (i) பிறந்த திகதி :

| ஆண்டு | மாதம் | திகதி |
|---|---|---|
| ☐☐☐☐ | ☐☐ | ☐☐ |

   (ii) 2013.01.01 ஆந் திகதியன்று வயது :

| வருடம் | மாதம் | திகதி |
|---|---|---|
| ☐☐ | ☐☐ | ☐☐ |

4. ஆணா/பெண்ணா ?

| பெண் | ஆண் |
|---|---|
| ☐ | ☐ |

(உரிய கூட்டினுள் X புள்ளடியிடவும்)

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா ?

| விவாகமானவர் | விவாகமாகாதவர் |
|---|---|
| ☐ | ☐ |

(உரிய கூட்டினுள் X புள்ளடியிடவும்)

6. இலங்கைப் பிரசையா என்பது பற்றி :----.

7. இனம் :----.

8. நிரந்தர வதிவிடத்திற்குரிய-

   (i) மாகாண சபை :----.
   (ii) மாவட்டம் :----.
   (iii) பிரதேச செயலாளர் பிரிவு :----.

9. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

10. கல்வித் தகைமைகள்.- பட்டப்படிப்பு தொடர்பான விடயங்கள் :-

| பி.ஏ.எம்.எஸ். (BAMS) | பி.யூ.எம்.எஸ். (BUMS) | பி.எஸ்.எம்.எஸ். (BSMS) |
|---|---|---|
| ☐ | ☐ | ☐ |

(உரிய கூட்டினுள் X புள்ளடியிடவும்)

(1) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.
(2) பட்டம் வழங்கப்பட்ட திகதி :----.
(3) வகுப்பு :----.
(4) பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்த மொழிமூலம் :----.
(5) செயல்முறை பயிற்சியைப் பெற்ற ஆண்டு :----.

11. ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவுசெய்தமை தொடர்பான விபரங்கள் :

(1) இலக்கம் :----.
(2) ஆண்டு :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் உறுதிப் படுத்துகின்றேன். நான் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் விபரங்கள் போலியானவை அல்லது தவறானவை என நியமன அதிகாரபீடத்திற்கு தெரியவருமிடத்து இதன் காரணத்தினால் நான் இந்தப் பதவிக்கு தகுதியற்றவராவதுடன் ஏதேனும் நட்ட ஈடொன்றைச் செலுத்தாமல் பணிநீக்கத்திற்கும் ஆளாவேனெனவும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ...................................... (முழுமையான பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும் .................................................. ஆந் திகதி அவரது ஒப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி :----.

**விண்ணப்பதாரி அரசாங்க ஊழியராகுமிடத்து திணைக்களத் தலைவரின் அறிக்கை**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையெனவும், அவரது வேலை, நடத்தை .................................................................. எனவும் நான் சான்றுபடுத்துகின்றேன். அவரை தற்பொழுது வகிக்கின்ற பதவியிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி :----.

8-90

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.